## தொழிலை அடிப்படையாகக் கொண்ட குடியேற்றம் (Employment – Based Immigration)

### கண்ணோட்டம்

ஐக்கிய அமெரிக்காவின் குடியேற்றச் சட்டத்தின் நிபந்தனையின் கீழ் உள்ள தகுதியான விண்ணப்பதாரிகளுக்கு ஒவ்வொரு நிதியாண்டும் (ஒக்ரோபர் 01 தொடக்கம் செப்ரெம்பர் 30 வரை) கிட்டத்தட்ட 140,000 தொழிலை அடிப்படையாகக் கொண்ட குடியேற்ற வீசாக்கள் உருவாக்கப்படுகின்றன. தொழிலை அடிப்படையாகக் கொண்ட குடியேற்ற வீசாக்கள் ஐந்து விருப்பத்திற்குரிய வகைப்பாடுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக வாழ்க்கைத்துணை மற்றும் பிள்ளைகள் உடன் பயணிக்கலாம் அல்லது தொழிலை அடிப்படையாகக் கொண்ட குடியேற்றவாசிகள் இணைந்து பயணிக்கலாம். தொழிலை அடிப்படையாகக் கொண்ட குடியேற்ற வீசாவின் இவ் ஐந்து வகையான வகைப்பாடுகளைப் பற்றி **usvisas.state.gov** என்ற இணையத்தளத்தில் நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

தொழிலை அடிப்படையாகக் கொண்ட குடியேற்ற வீசாவிற்காக விண்ணப்பிப்பதற்கு, **usvisas.state.gov**என்ற எமது இணையத்தளத்தில் **குடியேற்ற வீசா செயல்முறைகள் (Immigrant Visa Process)** என்ற பகுதியிலுள்ள படிமுறைகளைப் பின்பற்றவும். அத்தகைய படிமுறைகளைப் பூரணப்படுத்தியதும், தேசிய வீசா நிலையம் மூலம் உங்களுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை மீள்பரிசீலனை செய்யவும்.